## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.42/2024** **நாள் : 04.06.2024**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் (CMRL) ஆற்காடு சாலையில் வடபழனி சந்திப்பு, பவர் ஹவுஸ் மற்றும் ரங்கராஜபுரம் மெயின் ரோடு சந்திப்பு ஆகிய இடங்களில் குடிநீர் பிரதான குழாய்கள் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 05.06.2024 அன்று இரவு 9.00 மணி முதல் 06.06.2024 அன்று இரவு 9.00 மணி வரை மண்டலம்–8, 9 மற்றும் 10-க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் (CMRL) ஆற்காடு சாலையில் வடபழனி சந்திப்பு, பவர் ஹவுஸ் மற்றும் ரங்கராஜபுரம் மெயின் ரோடு சந்திப்பு ஆகிய இடங்களில் குடிநீர் பிரதான குழாய்கள் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 05.06.2024 அன்று இரவு 9.00 மணி முதல் 06.06.2024 அன்று இரவு 9.00 மணி வரை மண்டலம்–8, 9 மற்றும் 10-க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம் - 8<br>(அண்ணா நகர்) | அரும்பாக்கம், எம்.எம்.டி.ஏ.காலனி, அமைந்தகரை, சூளைமேடு(பகுதி). |
| மண்டலம் - 9<br>(தேனாம்பேட்டை) | சூளைமேடு (பகுதி), மகாலிங்கபுரம், நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு(பகுதி), தியாகராயநகர்(பகுதி), தேனாம்பேட்டை(பகுதி). |
| மண்டலம் - 10<br>(கோடம்பாக்கம்) | கோயம்பேடு, விருகம்பாக்கம், சாலிகிராமம், அசோக் நகர், வடபழனி, மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம், தியாகராய நகர். |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள

முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in